

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | ஏப்ரல் 01, 2021 | புரட்சி 20 | முழக்கம் 12 | விலை: ரூ.3.00

# ‘சனாதன தர்ம’ எதிர்ப்பாக உருவெடுக்கிறது, தேர்தல் களம்!

தமிழ்நாட்டின் தேர்தல் களம் சனாதன தர்மத்துக்கு எதிரான களமாக உருவெடுத்திருக்கிறது. அதாவது சமூகத்தில் ‘ஜாதி-வர்ணாஸ்ரம’ ஒடுக்குமுறைகளை மாற்றவே முடியாது; அது நிலையானது என்பதே ‘சனாதன தர்மம்’. வேதமதத்தை ஒட்டு மொத்த மக்களின் ‘இந்து’ மத தர்மமாக்கி திணிக்க முயலும் ‘சனாதன’ கட்சியான பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ்., அதனிடம் ‘சரண’டைந்து கிடக்கும் அ.தி.மு.க. உதவியுடன் ‘சனாதன தர்மத்தைத்’ திணிக்கிறது. கல்வியை முடக்குதல், இஸ்லாமியர்களே எதிரிகள் என்று அவர்களைத் தனிமைப்படுத்தி ‘மனுவாதி’களின் சமூகச் சுரண்டல் மேலாதிக்கத்தை திசை திருப்புதல், ‘சனாதன தர்மத்தின்’ அடையாளமான மக்களே பேசாத மொழியான சமஸ்கிருதத்தை திணித்தல், நாட்டின் வாழ்வாதாரப் பிரச்சினைகளான தொழில் வளர்ச்சி, விலைவாசி ஏற்றம், பெட்ரோல் டீசல் விலை உயர்வு, ஜி.எஸ்.டி. வரி, ‘நீட்’ திணிப்பு, இடஒதுக்கீடு மறுப்பு போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைவிட ‘வேத பார்ப்பனியத்தை’ உயர்த்திப் பிடிப்பதே முதன்மையான இலட்சியம் என்ற நோக்கத்தோடு ‘சனாதன தர்மத்தைத்’ திணிக்கிறது அ.இ.அதி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி ஆட்சி.

இந்த நிலையில் இந்த ஆபத்துகளை முறியடிக்க அ.தி.மு.க. கூட்டணியை வீழ்த்த வேண்டும்; இது வழமையாக இரு அணிகளுக்கிடையே நடக்கும் போட்டி அல்ல; ‘சனாதன தர்மத்தைத்’ திணிக்கும் பார்ப்பனிய அணிக்கும் சமூக நீதிக்கான மக்கள் அணிக்கும் இடையிலான கருத்துப் போராட்டம் என்று இறுதிகட்டப் பிரச்சாரத்தில் தலைவர்கள் பேசி வருகின்றார்கள்.

சேலம் சீலநாயக்கன்பட்டியில் கடந்த 28ஆம் தேதி ஒரே மேடையில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தியும் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினும் ஒரே மேடையில் பங்கேற்றுப் பேசினர். தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்களும் பங்கேற்றனர். கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி, “தற்போது தமிழ்நாட்டில் நடக்கும் தேர்தல் இரண்டு கட்சிகளுக்கிடையிலான போட்டி அல்ல; இரு வேறு கருத்தியல்களுக்கு எதிரான போராட்டம். தமிழர்களின் மொழி, பண்பாடு, வரலாறு அனைத்தின் மீதும் தொடுக்கப்படும் தாக்குதலை எதிர்த்து நடக்கும் போராட்டம். பல்வேறு மொழி, இன, பண்பாடுகளைக் கொண்ட இந்தியாவில் அனைவரையும் சமநிலையில் நடத்தாமல் தங்களது பண்பாடுதான் உயர்ந்தது என்று திணிக்க முயலும் ஆர்.எஸ்.எஸ். கருத்தியலுக்கு எதிரான போராட்டம். ஜெயலலிதா இருந்தபோது இருந்த அ.இ.அ.தி.மு.க. இப்போது இல்லை; இப்போதுள்ள அ.இ.அ.தி.மு.க. - ஆர்.எஸ்.எஸ் பா.ஜ.க.வாக மாறிவிட்டது. அ.இ.அ.தி.மு.க. என்ற முகமூடியை அணிந்து வருகிறது. தமிழ் மொழி, பண்பாடு, உணர்வு என்பது அடுத்தவர்கள் காலில் விழாத பண்பாடு. அமித்ஷா, மோடி காலில் விழுந்து அந்தப் பண்பாட்டை அ.இ.அ.தி.மு.க. அழிக்கிறது” என்று ராகுல் காந்தி பேசியுள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் தொல். திருமாவளவன், இப்போது நடப்பது சனாதன தர்மத்துக்கும் அதை வீழ்த்த வேண்டும் என்ற சமூக நீதிக்கான சக்திகளுக்கும் இடையிலான போர் என்று தொடர்ந்து பேசி வருகிறார்.

காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ப. சிதம்பரம், கலைஞர் தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில், “பாரதிய ஜனதா கட்சி சனாதன தர்மத்தை தனது கொள்கையாகக் கொண்டிருக்கிறது. அதை திராவிட கட்சியும் தேசிய இயக்கமும் தமிழ்நாட்டில் உறுதியாக எதிர்க்கிறார்கள். தந்தை பெரியாருக்குப் பின்னால் பெருந்தலைவர் காமராசரும், பேரறிஞர் அண்ணாவும் அதை எதிர்த்தார்கள். மூன்று தலைமுறை இங்கே சனாதன தர்மத்தை வென்று காட்டியிருக்கிறது. மீண்டும்’ சனாதன தர்மம்’ நுழைந்து விடாமல் பார்த்துக் கொள்வது வாக்காளர்களின் கடமை” என்று கூறியுள்ளார்.

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினும் இது தமிழர்களின் சுயமரியாதையை மீட்டெடுக்கும் தேர்தல் என்று பேசி வருகிறார்.

தமிழ்நாட்டு மக்களிடம் உருவாகியுள்ள எதிர்ப்பு அலையைப் புரிந்து கொண்டதால் அ.இ.அ.தி.மு.க. வேட்பாளர் மட்டுமல்ல, பா.ஜ.க. வேட்பாளர்களே, மோடி - அமீத்ஷா படங்களைப் போடுவதைத் தவிர்த்து வருகின்றனர். அமைச்சர் செல்லூர் ராஜூ, எடப்பாடி பழனிச்சாமிக்கு பா.ஜ.க. தலைவர்களை தேர்தல் பிரச்சாரத்துக்கு அழைக்க வேண்டாம் என்று கையெழுத்திட்டு எழுதிய கடிதம் முக நூலில் வலம் வந்து கொண்டிருக்கிறது. இது போலி கடிதம், மறுப்பு தெரிவிக்கப் போகிறோம் என்று அ.இ.அ.தி.மு.க. ‘அய்.டி.’ பிரிவு மறுத்து மறுப்பு வெளியிடப் போவதாக அறிவித்தது. ஆனால் அப்படி மறுப்பு எதுவும் வெளியிடவில்லை.

## திமுக அணியின் வேட்பாளர்களை ஆதரித்து கழகத் தோழர்கள் பரப்புரை

தமிழகத்தின் உரிமைகளை மீட்க, தமிழகத்தின் தனித்தன்மையை காக்க திமுக அணியை ஆதரித்து பிரச்சாரம் செய்ய திருச்சி செயலவை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து, திமுக அணியின் வேட்பாளர்களை ஆதரித்து கழகத் தோழர்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னை மாவட்டக் கழகம் சார்பில், ஆயிரம் விளக்கு தொகுதி வேட்பாளர் மருத்துவர் எழிலனை ஆதரித்து கடந்த 20.03.2021 முதல் தொடர்ந்து தினமும் பிரச்சாரம் கழகத் தோழர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஆயிரம் விளக்கு தொகுதிக் குட்பட்ட, மக்கீஸ் கார்டன், பட்டுக்கோட்டை அழகிரி நகர், தாமஸ் ரோடு பகுதிகளிலுள்ள குடியிருப்புகள், சுதந்திர நகர் ஆகிய பகுதிகளில் வீடு வீடாக துண்டறிக்கை பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

23.03.2021 அன்று சைதாப்பேட்டை தொகுதி திமுக வேட்பாளர் மா.சுப்பிரமணியத்தை ஆதரித்து சுப்பு பிள்ளை தோட்டம், கண்ணமாபேட்டை காந்திபுரம் ஆகிய பகுதிகளிலிலும், 24.03.2021 அன்று தியாகராயர் நகர் தொகுதி வேட்பாளர் ஜெ.கருணாநிதியை ஆதரித்தும் சென்னை மாவட்ட கழகத் தோழர்களால் துண்டறிக்கை பிரச்சாரம் நடைபெற்றது.

கோவை கழகத் தோழர்களின் சார்பில், கவுண்டம்பாளையம் தொகுதி திமுக வேட்பாளர் பையா ஆர். கிருஷ்ணன், சிங்காநல்லூர் தொகுதி திமுக வேட்பாளர் கார்த்திக், தொண்டாமுத்தூர் தொகுதி வேட்பாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி, கிணத்துக்கடவு தொகுதி திமுக வேட்பாளர் குறிச்சி பிரபாகரன், கோவை தெற்கு தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் மயூரா ஜெயக்குமார், கோவை வடக்கு தொகுதி திமுக வேட்பாளர் சண்முக சுந்தரம் ஆகியோரை ஆதரித்து துண்டறிக்கை பிரச்சாரங்களை அந்தந்தத் தொகுதிகளில் வீடு வீடாக கழகத் தோழர்கள் செய்து வருகின்றனர்.

திருச்சி மாவட்ட கழகம் சார்பில், திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர், அன்பில் மகேஷ் பொய்யா மொழி, திருச்சி வடக்கு தொகுதி திமுக வேட்பாளர் முனைவர் இனிகோ இருதயராஜ், திருச்சி மேற்கு சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கே.என்.நேரு ஆகியோரை ஆதரித்து துண்டறிக்கை பிரச்சாரம் கழகத் தோழர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அவினாசி தொகுதியில் திமுக சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள, ஆதித் தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் அதியமானை ஆதரித்து மதுரை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் பிரச்சாரம் நடைபெற்றுவருகிறது.

ஈரோடு கிழக்கு சட்டன்ற தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் திருமகன் ஈ.வெ.ரா, அரவக்குறிச்சி திமுக வேட்பாளர் ஆர்.இளங்கோ ஆகியோரை ஆதரித்து, கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தின சாமி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரை சாமி, தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம் ஆகியோர் பரப்புரை செய்தனர்.

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் வெங்கடாசலத்தை ஆதரித்து பள்ளி பாளையம் கழகத் தோழர்களும், நாமக்கல் மாவட்ட பொறுப்பாளர்களும் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

# தமிழர் வேலை வாய்ப்புகள் பறிப்பு; வடநாட்டுக்காரர்கள் குவிப்பு

தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புகளை வட மாநிலத்தவர் ஏராளமாக பறித்து வருகிறார்கள். குறிப்பாக டெல்லி, உ.பி., இராஜஸ்தான், அரியானா மாநிலத்தவர்கள் அதிக அளவில் மத்திய அரசுத் துறைகளில் குவிக்கப்பட்டு வருகிறார்கள்.

- பாரதிய ஜனதா கட்சி, தனது தேர்தல் அறிக்கையில் வட மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டில் வேலை பார்ப்போருக்கு குடியிருப்புகள் கட்டித் தரப் போவதாக தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு உறுதி கூறி அந்தத் தமிழர்களிடமே வாக்கு கேட்கும் ‘துணிச்சலை’ப் பெற்றிருக்கிறது.
- அண்மையில் திருச்சி, பொன்மலை தொடர் வண்டிப் பணிமனையில் 58 பணியிடங்கள் நிரப்பப்பட்டன. இதில் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் 12 பேர் மட்டுமே.
- 2012ஆம் ஆண்டு சென்னை இரயில்வே மண்டலம் 884 காலிப் பணியிடங்களை நிரப்பியது. இதில் தமிழகத்தைச் சார்ந்தவர்கள் 80 பேர் மட்டுமே.
- தமிழ்நாட்டில் செயல்படும் மத்திய அரசு அதிகாரத்தின் கீழ் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்களில் இரண்டு தலைமுறைகளாகவே தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். 2018ஆம் ஆண்டு இரயில்வே வேலை வாய்ப்பு அமைப்பு வழியாக குரூப்-டி பணிக்காக 2362 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. இதில் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் 74 பேர் மட்டுமே.
- 2002 மற்றும் 2005ஆம் ஆண்டுகளில் திருச்சி-திருவெறும்பூர் பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல் நிறுவனத்தில் 138 பொறியாளர்கள் நியமிக்கப்பட்டனர். இதில் தமிழ்நாட்டைச் சார்ந்த ஒருவர்கூட இல்லை. 2008ஆம் ஆண்டு 77 செயற் பொறியாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. இதில் 17 பேர் மட்டுமே தமிழர்கள்.
- 2008ஆம் ஆண்டு சென்னை வருமான வரித் துறை அலுவலகத்தில் 200 உதவியாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. இதில் 4 பேர் மட்டுமே தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். 2014இல் இதே அலுவலகத்தில் 78 பணியிடங்கள் நிரப்பப்பட்டன தமிழ்நாட்டைச் சார்ந்த 3 பேருக்கு மட்டுமே வேலை.
- ஆவடி கனரக வாகனங்கள் தயாரிப்பு நிறுவனத்தில் 100 ‘சார்ஜ்மேன்’ பணியிடங்கள் நிரப்பப்பட்டபோது தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களுக்கு 15 பேருக்கு மட்டுமே வாய்ப்பு. இதே நிறுவனம் 2011ஆம் ஆண்டு 108 பயிற்சியாளர் பணிக்கு ஆள் சேர்த்த போது தமிழ்நாட்டைச் சார்ந்த 15 பேருக்கு மட்டுமே வாய்ப்பு.

### மோசடிகள்; ஆள் மாறாட்டம்

- மோசடிகள் செய்தும் வடநாட்டுக்காரர்கள் தமிழ்நாட்டு வேலைகளை அபகரித்தனர். 2016ஆம் ஆண்டு அஞ்சலகத் துறை வேலை வாய்ப்புகளுக்கான தேர்வை நடத்தியது. இதில் வடநாட்டுக்காரர்கள் ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றது அம்பலமானது. தமிழ் மொழியே தெரியாத ஒரு இராஜஸ்தான்காரர் தமிழ்மொழி தேர்வில் 25க்கு 24 மதிப்பெண் பெற்றது கண்டறியப்பட்டு, ஆள் மாறாட்ட மோசடி வெளிச்சத்துக்கு வந்தது. பிறகு இந்த தேர்வு நிராகரிக்கப்பட்டது.
- 2015இல் கல்பாக்கத்தில் உள்ள இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வுக் கூட பணியாளர்கள் பணியிடங்களை நிரப்பியபோது இரசாயன ஆய்வுக் கூட படிப்பை முடித்திருப்பது கட்டாயம் என்று அறிவித்தார்கள். ஆனால் இப் படிப்பு தமிழ்நாட்டில் எந்தப் பல்கலைக்கழகத்திலும் இல்லை. எனவே வட இந்தியர் களைக் கொண்டு நிரப்பி விட்டார்கள்.
- 2017இல் ஆசிரியர் தேர்வாணையம் மூலம் பாலிடெக்னிக்குகளில் விரிவுரையாளர் நியமனத்தின்போது தமிழ்நாடு அரசு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பணியாற்றுவோருக்கு முக்கியத்துவம் தராமல் 31 சதவீத இடங்களை பிற மாநிலத்தவருக்கு வழங்கப்பட்டது. இதில் 1068 பணியிடங்களில் 68 சதவீதம் பேர் வடமாநிலங்களிலிருந்து நியமிக்கப்பட்டனர். இதை எதிர்த்து போராட்டங்கள் நடந்தன. அதன் பிறகு தேர்வு இரத்து செய்யப்பட்டது.
- 2019ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின் வாரியத்தில் 300 உதவி பொறியாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. இதில் நியமனமான 39 பேர் வடநாட்டுக்காரர்கள். இவர்களுக்கு தமிழே தெரியாது; ஆனாலும் நியமிக்கப்பட்டனர்.

### தமிழக அரசின் துரோகம்

2016ஆம் ஆண்டு ஜெயலலிதா மருத்துவ மனையில் இருந்தபோது முதல்வராக இருந்த ஓ. பன்னீர்செல்வம், தமிழ்நாடு தேர்வாணையத்தில் ஒரு ஆபத்தான தமிழர்கள் உரிமைக்கு வேட்டு வைக்கக்கூடிய ஒரு திருத்தத்தை ‘ஓசைப் படாமல்’ கொண்டு வந்தார். தமிழ் தெரியாதவர்களும் தமிழ்நாடு அரசுப் பணிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்பதே அந்தத் திருத்தம். இதைப் பயன்படுத்தி தமிழ்நாடு அரசுப் பணிகளிலும் வடநாட்டுக்காரர்கள் நுழைந்து விட்டார்கள்.

சமூக நீதி பேசும் “மருத்துவர்”கள் அவ்வப்போது இதை எதிர்த்து ‘அறிக்கைகள்’ வெளியிட்டு விட்டு இப்போது அ.இ.அ.தி.மு.க. ஆட்சியே மீண்டும் வரவேண்டும் என்று கைகோர்த்து விட்டார்கள். இந்த துரோகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க அ.இ.அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியை முறியடிப்போம்!

***75 சதவீத வேலை வாய்ப்புகளை தமிழ்நாட்டு மக்களுக்கே வழங்கப்படும் என்று உறுதியளித்துள்ள தி.மு.க. கூட்டணியை ஆதரிப்போம்!***

- புரட்சிப் பெரியார் முழக்கம் 01.04.2021

# கணையாழி ‘தீபாவளி’ மலரில் பெரியாரின் அட்டைப் படத்தைப் போட்டேன்’ - ப. சிதம்பரம்

*மூன்று தலைமுறையாக சனாதன தர்மத்தை தமிழ்நாடு தோற்கடித்திருக்கிறது என்று கூறிய ப. சிதம்பரம், பெரியாரை நான் பல ஆண்டுகளுக்கு முன்பே உள்வாங்கியவன் என்று கூறினார்.*

*கலைஞர் செய்தி தொலைக்காட்சியில் அவர் அளித்த பேட்டியிலிருந்து சில பகுதிகள்:*

**கேள்வி :** *2019 கால தேர்தல்களில்கூட நீங்கள், ஸ்டாலின் பாஜகவை எதிர்ப்பது மிக கடுமையான பணி என்று குறிப்பிட்டீர்கள் அது எந்தளவு கடுமையானது ?*

**பதில்:** மிக கடுமையான பணி அது. அவர் ஆட்சிக்கு வந்தவுடன் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பாஜக தான் ஆட்சியில் இருக்கப் போகிறது. மாநில அரசு மத்திய அரசிற்கு இணக்கமாகத்தான் போக வேண்டும். ஆனால், தவறு நடக்கிற போது சுட்டிக் காட்டுகிறார். மத்திய அரசை விமர்சிப்பது என்பது நெருப்பின் மேல் நடக்கிறது போன்றது தான். அதை மிக கவனமாக செய்து வருகிறார். அழுத்தமான சொற்களை பயன்படுத்துகிறார். அதே நேரத்தில் யாரையும் வசைபாடுவதில்லை. யாரை பேசும் போதும் தவறான வார்த்தைகளை பயன்படுத்துவதில்லை. மிக கவனமாக செயல்பட்டு வருகிறார். அவர் முதல்வராக வர வேண்டும் முதல்வரான பின்பு மத்திய அரசிடம் இணக்கமாக இருக்க வேண்டும். இணங்கி போதல் வேறு கொள்கையில் இருப்பது வேறு.

**கேள்வி :** *2019 திமுக மேடையில் தந்தை பெரியார் தான் எங்களுக்கும் பாட்டன் உங்களுக்கும் பாட்டன் என்று கூறினீர்கள் ?*

**பதில் :** உண்மை தான். தந்தை பெரியார் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர். பின் அதிலிருந்து வெளியேறி திராவிடர் கழகத்தை ஆரம்பித்து அதன் தலைவராக இருந்தார். எல்லாருக்கும் பாட்டன் அவர்தான்.

**கேள்வி :** *பெரியாரிய பார்வையோடும் காங்கிரஸ் செயல்படுகின்ற நிலையில் உள்ளதா ?*

**பதில் :** நான் பெரியாரின் பார்வையை உள்வாங்கி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ’கணையாழி’ பத்திரிக்கையை பொறுப்பெடுத்து நடத்துகின்ற போது அதன் தீபாவளி மலருக்கு அனைவரும் சங்கராச்சாரியை பேட்டிகண்டு அட்டை படத்தில் போடுவார்கள். நான் பெரியாரை பேட்டி கண்டு அட்டை படத்தில் பதிவிட்டேன்.


**கேள்வி :** இந்த தேர்தலில் தமிழ் வாக்காளர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான பிரச்னையாக நீங்கள் எதை கருதுகிறீர்கள்?

**பதில் :** தமிழ் மொழிக்கு பேராபத்து ; இந்தி வந்து தமிழ் மீது உட்கார்ந்து கொண்டுவிடும். தமிழ் கலாச்சாரத்துக்கு பேராபத்து. இந்து வேறு முஸ்லிம் வேறு, இந்து வேறு கிருஸ்துவர்கள் வேறு என்பது தமிழ் கலாச்சாரம் கிடையாது. இந்து, கிருஸ்துவ, முஸ்லீம்களை இணைப்பது தமிழ் மொழியும், தமிழ் இனமும் தான். பாரதிய ஜனதா கட்சி புகுத்துகிற கலாச்சாரம் என்பது தமிழ் கலாச்சாரத்தை அழித்துவிடும். மூன்றாவது முக்கிய காரணம், பாரதிய ஜனதா கட்சி சனாதன தர்மத்தை தனது கொள்கையாக கொண்டிருக்கிறது. அதை திராவிட இயக்கமும் தேசிய இயக்கமும் தமிழ்நாட்டில் உறுதியாக எதிர்க்கிறார்கள்.

தந்தை பெரியாருக்குப் பின்னால் பெருந்தலைவர் காமராசரும், பேரறிஞர் அண்ணாவும் அதை எதிர்த்தார்கள். மூன்று தலைமுறை சனாதன தர்மத்தை எதிர்த்து தமிழ்நாடு வென்றிருக்கிறது. மீண்டும் சனாதன தர்மம் நுழைந்து விடாமல் பார்த்துக் கொள்வது வாக்காளர்களின் கடமை. எனவே, தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரம், தமிழ் பண்பாடு ஆகியவற்றை காப்பாற்றவேண்டுமானால் பாஜக கூட்டணி வைத்துள்ள அதிமுக ஆகியவை தோற்கடிக்கப்பட வேண்டும். அதிமுக ஆட்சியி லிருந்து இறக்கப்பட்டு திமுக அமரும். ஆனால் பாஜக அரசு போகாது, பாஜகவின் நச்சுக்கொள்கைகள் தென்னகத்தில் நுழைய விடாமல் தடுத்தோம் என்ற பெருமை தமிழர்களுக்கு கிடைக்கும்.

**- கலைஞர் செய்தி தொலைக்காட்சிக்கு ப. சிதம்பரம் அளித்த நேர் காணலிலிருந்து**

## உரிமைகளை பெறுவது என்றால் என்ன ?



நாம் நம்முடைய உரிமைகளை பெறுவது என்றாலே என்ன அர்த்தம் என்றால், நம்முடைய உரிமைகளைப் பறித்து அனுபவித்து வருகிற எதிரிகளின் ஆதிக்கம் அழிவு என்றுதான் அர்த்தம் ஆகும். அவர்களுடைய அழிவின் மீதுதான் நாம் நம்முடைய உரிமைகளைப் பெற முடியும், அந்த அளவுக்கு அவர்கள் நம் மீது உரிமைகளை பெறுவதற்கில்லாமல் ஆதிக்கம் பெற்று இருக்கிறார்கள்.

ஆனால் இந்தக் காரியம் சுலபமானதல்ல ; சாதாரணமாக சாதித்து விடலாம் என்கிற தன்மையில் இல்லை. இது மிகப்பெரிய காரியம் என்பதோடல்லாமல் மிகப்பெரிய பயங்கரமான பலர் பலியாக வேண்டிய காரியமாகும், நம்முடைய எதிரிகளுக்கு இருக்கிற வசதிகளும், பக்கபலமும் மிக மிக ஏராளமானவை. மதமும் கடவுள் சாஸ்திரங்களும், ஆட்சியும், அதனைச் சார்ந்தவைகளும் அவர்கள் பக்கம் இருக்கின்றன என்பதுடன், நம்முடைய எதிரிகளை பாதுகாப்பதற்காகவே, நம்முடைய எதிரிகளின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக வென்றேதான் அவைகளோடும் கூட சர்க்காரும் இருந்து வருகிறது. **(விடுதலை 30.05.1951)**

### ‘பெரியாரும் – மார்க்சியமும்’ தலைப்பில் கொளத்தூர் மணி உரை (7)

# பெரியார் இயக்கத்திலிருந்து ‘சமதர்ம வாதியர்’ வெளியேறியதற்கு, என்ன காரணம்?

*குமரி மாவட்டம் குழித்துறையில் ஜன.24, 2021 அன்று ‘பெரியாரும் மார்க்சியமும்’ என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை இது.*

*எம்.சி.பி.அய்.(யு) என்ற மார்க்சிய கட்சி - தமிழ்நாட்டில் மார்க்சியர்கள் - பெரியாரியலை உள்வாங்கிக் கொள்ளவில்லை என்ற விமர்சன அறிக்கையை வைத்திருந்தது. அதைத் தொடர்ந்து இக்கட்சி வெளியிட்டுள்ள கொள்கை அறிக்கையில், “சாதி-மதப் பிரிவினை சக்திகள் வலிமை பெற்றிருக்கும் இக்காலக்கட்டத்தில் பெரியார், அம்பேத்கரின் தேவையை கட்சி பூரணமாக உணர்ந்துள்ளது” என்று இந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. அந்தப் பின்னணியில் இந்தக் கருத்தரங்கையும் ஏற்பாடு செய்தது குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.*

அய்ரோப்பியப் பயணம் முடிந்து பெரியார் திரும்பி வந்த பின்னால், 1933ஆம் ஆண்டு, சுயமரியாதை இயக்கம் தனியாகவும், இன்னொன்று அரசியல் கட்சியாக இருப்பது என்றும், மக்களை பக்குவப்படுத்தி தேர்தலில் ஈடுபடுவது என்றும் தீர்மானிக்கிறார்கள். சுயமரியாதை சமதர்ம கட்சி என்ற ஒரு கட்சியைத் தொடங்குகிறார்கள். அந்த அமைப்பில், காப்பாளராக, ஏற்கனவே சுயமரியாதை இயக்கத்தில் பணிபுரிந்த சிலரில் ஒருவரை தான் - ஜீவானந்தம் அவர்களை பொறுப்பாளராக, சாத்தான் குளம் அ.ராகவன், புதுக்கோட்டையைச் சேர்ந்த முத்துசாமி வல்லத்தரசு போன்றவர்களெல்லாம் அதற்கு நியமிக்கப்படுகிறர்கள். அந்த காலகட்டத்தில், அதற்கு பின்னால், அவர்கள் மிகவும் கடும் போக்காளர்களாக நடந்துக் கொண்டதன் காரணமாக, பல சிக்கல்களை உருவாக்குகிறார்கள். தன்னுடைய கட்சி கூட்டத்திற்கு, பெரியாருடைய இயக்கக் கூட்டங்களுக்கு பொது இயக்கம் என்ற அடிப்படையில் எல்லோரையும் அழைப்பது வழக்கம்.

பெரியார் தீண்டாமை ஒழிப்பு மாநாடு ஒன்றை நடத்துகிறார். இந்த மாநாட்டுக்கு சோமசுந்தர பாரதியாரைக் கூப்பிடுகிறார். அவர் காங்கிரஸ்காரர். அங்கிருக்கிற தீண்டாமை ஒழிப்புக் குழுவிற்கு தலைவராக இருக்கிறார். அவரைக் கூப்பிடுகிறார். அவர் பேசிக் கொண்டிருக்கும் போது ஜீவானந்தம் போன்றோர்களெல்லாம் சத்தம் போடுகிறார்கள், அவர் பேசக்கூடாது என்று கூறுகிறார்கள். எதற்கு வேறு கட்சி ஆட்களெல்லாம் நம் கூட்டத்தில் பேச வேண்டும் என்று சத்தம் போடுகிறார்கள்; பெரியார் சொல்கிறார், நாம் எடுத்துக் கொண்டிருக்கிற தலைப்பிற்கு பொருத்தமானவரான அவரை அழைத்திருக்கிறோம். எல்லோருடைய கருத்தையும் தெரிந்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்கிறார்; அவர்கள் ஏற்றுக் கொள்வதேயில்லை. அதற்கு பின்னால் பெரியார் மிகக் கடுமையாகப் பேசி விட்டு சொல்லுகிறார், இப்படியெல்லாம் நீங்கள் இருந்தீர்களென்றால், நீங்கள் மட்டும் தனியாக நின்றுக் கொண்டிருக்க வேண்டியது தான். இதற்கு யாரையெல்லாம் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு, அந்தந்த துறைக்கு மட்டும் அவர்களை சேர்த்துக் கொள்ளுகிறோம். இப்படி சொல்லுகிற காரணத்தால், நீங்களும்கூட இந்த அமைப்பை விட்டு போய் விடலாம். போய்விட்டு மற்றவர்களைப் போல எனக்கு எதிர்பிரச்சாரம் எதிர்ச் செயலில் ஈடுபடலாம். அதற்கும் தலை கொடுக்க நான் தயாராக இருக்கிறேன் என்று கடுமையாக பெரியார் சொல்லுகிறார். அடுத்த நாள் ‘குடிஅரசு’ ஏட்டிலும் எழுதுகிறார். ஆனால், அவர்கள் இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து கட்சியை விட்டு வெளியே போகிறார்கள். இந்த சிக்கல்களெல்லாம் அப்பொழுது நடக்கிறது, அவர்களோடு இருக்கிறபோது. பின்னால் போய்விடுகிறார்கள். அந்த காலகட்டத்தில் அரசாங்கமும் காங்கிரசும் ஒரு உடன்பாட்டுக்கு வருகின்றன. அந்த அரசியலை இப்பொழுது அதிகமாக சொல்ல வேண்டியது இல்லை.

உப்பு சத்தியாகிரகம் என்ற ஒன்றை காந்தி நடத்திக் கொண்டிருந்தார். நாம் கேள்விபட்டிருப் போம். ஒத்துழையாமை இயக்கம், மற்றும் என்னென்னவோ நடத்தினார்கள். அதில் காங்கிரஸ் காரர்களெல்லாம் கைது செய்யப்படுகிறார்கள். சிறை வைக்கப்படுகிறார்கள். அதற்கப்புறம் காந்தி அரசோடு சமாதானம் பேசுகிறார். என்ன சமாதானம் என்றால், இனிமேல் நாங்கள் போராட்டம் நடத்த மாட்டோம், எங்களை வெளியே விட்டுவிடு, என்று கேட்கிறார். அவர்கள் சொல்லுகிறார்கள். எல்லோரையும்விட முடியாது, வன்முறையில் ஈடுபட்டவர்களை உள்ளே வைத்து



விட்டு மீதி ஆட்களைத் தான் வெளியே விடுவோம் என்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுகிறார் காந்தி. அதற்குத் தான் காந்தி இர்வின் ஒப்பந்தம் என்று பெயர். அது என்னவோ வெற்றி ஒப்பந்தம் என்பதைப் போல, பேரெல்லாம் வைத்தான், காந்தி-இர்வின் ஒப்பந்தம் என்று. காந்தி - இர்வின் பாலம் என்று ஒரு பாலமும் சென்னையில் உண்டு. ஆனால், அது ஒன்றுமில்லாத ஒப்பந்தம். ஒப்பந்தத்தில் அவர்கள் கையெழுத்திட்டது என்பது, இனிமேல் போராட்டம் நடத்த மாட்டோம். போராட்டம் நடத்தவில்லையென்றால், பிரச்சாரத்திற்கு உன்னை அனுமதிப்போம் என்று அரசு சொல்லு கிறது. இப்படித் தான் அந்த போராட்டம் நடக்கிறது. காந்தி வட்ட மேஜை மாநாட்டுக்கு போகமாட்டேன் என்கிறார். இந்த மாநாட்டிற்கு ஒழுங்காக போகிறேன் என்று ஒத்துக் கொண்டால்தான் விடுதலை செய்வோம் என்கிறார்கள். அதற்கும் காந்தி ஒத்துக் கொண்டார் . அது முடிவுக்கு வருகிறது.

அதற்குப் பின்னால் பெரியார், இது வரை நம்முடைய இரண்டு பகைவர்களும் அவர்களுக்குள் இருந்த பகைமையால், நம்மை கவனிக்காமல் இருந்து விட்டார்கள்; இனிமேல் அவர்களின் பார்வை நம்மை நோக்கித் திரும்பும் என்று சொல்லுகிறார். அது

- **பெரியாரை விட்டு விலகிய ஜீவா, இராமாயணத்தின் பெருமைகளைப் பேசத் தொடங்கினார்.**
- **ஒரே மாநாட்டில் ஒரே தீர்மானம் போட்டு ‘சமதர்மக் கட்சி’யை கலைத்துவிட்டு காங்கிரசில் சேர்ந்து விட்டார்கள்.**
- **முதலாளிகளை எதிர்ப்பவர்கள் ‘பிறவி’ முதலாளியான பார்ப்பனர்களையும் கல் முதலாளியான கடவுளையும் ஏன் எதிர்க்க மறுக்கிறார்கள், என்றார்.**
- **பெரியார் கம்யூனிசத்தை நேசித்தார்; கோபம் கம்யூனிஸ்டுகள் மீது மட்டுமே.**

போலவே பெரியாருடைய சுயமரியாதை இயக்கத்தின் 170 அலுவலகங்கள் சோதனைக்குள்ளாகின்றன. பெரியாருக்கு வருகிற கடிதங்கள் எல்லாம் சென்சார் செய்கிறார்கள். சர் ஆர்.கே.சண்முகம் செட்டியார். இந்திய பாராளுமன்றத்திற்கு அப்போது மத்திய சட்ட மன்றம் என்று பெயர், அதனுடைய அவைத் தலைவராக, அதாவது சபாநாயகராக இருக்கிறார். அவருக்கு வருகிற கடிதங்களைக்கூட சென்சார் செய்கிறார்கள். ஏனென்றால், பெரியாரோடு தொடர்புடையவர், சுயமரியாதை இயக்கத்தில் இருந்தவர். எனவே அவர் கடிதங்கள் கூட பார்க்கிற அளவிற்கு சென்சார் நடந்தன. அது தீவிரப்படுத்தப் படுகிறது. எப்படியாவது பொதுவுடமை பரப்புரைகள் நிறுத்தப்பட வேண்டுமென்று நினைக்கிறார்கள். அப்பொழுது பெரியார் சொல்கிறார், எச்சரிக்கையாக இருங்கள் தோழர்களே. நீங்கள் மேடையில் பேசுகிற சொற்கள் ஒவ்வொன்றிற்கும் பொருள் உண்டு என்ற கருத்தில் பேசுங்கள் என்று சொல்லுகிறார். நம் ஆட்கள் தான், தூக்கு மேடைக்கு தயார், கொலை செய்ய தயார், நூறு பேரைக் கொல்லுவேன் என்றெல்லாம் பேசுவார்களே. அந்த மாதிரி எல்லாம் பேச வேண்டாம் என்று பெரியார் அந்த பொருளில் சொல்லுகிறார். அதற்கு பின்னால் ஒரு அறிக்கை விடுகிறார். அதன் பின்னர், பகத்சிங் எழுதிய நான் ஏன் நாத்திகனானேன் என்றொரு புத்தகத்தை மொழி பெயர்த்து பெரியார் வெளியிடுகிறார். நான் அடிக்கடி சொல்லுவேன். பாரதியார் பாட்டுப் பாடுதல் ஒன்று, பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்று உண்டு. யார் மொழி பெயர்த்தார்களோ இல்லையோ, பெரியார்தான் மொழி பெயர்த்துக் கொண்டே வந்தார். லெனினும் மதமும், ஐந்தாண்டு திட்டம், பொதுவுடமை கோட்பாடுகள், இன்னும் நிறைய புத்தகங்கள் மொழி பெயர்க்கப் பட்டது, பகத் சிங், பெர்ட்ராண்ட் ரசல், ஜீன் மெஸ்லியர் என்கிற கத்தோலிக்க பாதிரியார், ஆயர் ஒருவர் எழுதிய மரண சாசனம் - நான் இறந்த பிறகு வெளியிடுங்கள் என்று கிருஸ்துவ மதத்தைப் பற்றி எழுதியது. அதை வாங்கி, மூன்று தொகுதியாக பெரியார் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார். நான் ஏன் கிறிஸ்துவனல்ல என்ற பெர்ட்ரண்ட் ரசல்-இன் புத்தகத்தை தமிழில் மொழி பெயர்த்து பெரியார் வெளியிடுகிறார். இங்கர்சாலினுடைய புத்தகங்கள். அம்பேத்கர், லாகூர் மாநாட்டில் பேசிய உரை, இந்திய மொழிகளிலேயே தமிழில் தான் முதலில் மொழி பெயர்க்கப்பட்டது. மனதில் வைத்துக் கொள்ளுங்கள். வேறு எந்த மொழியிலும் மொழி பெயர்க்கப்படவில்லை. ஆங்கில மொழியில் தான் இருந்தது. அதை மாற்றி, முதலில் தமிழில், இங்கு தான் மொழி பெயர்த்து வெளியிடுகிறார்கள். வந்த இரண்டாவது மாதமே மொழிபெயர்த்து வெளியிடப்படுகிறது. ஏனென்றால், பெரியாருக்கு ஒரு படியை அனுப்பி வைக்கிறார் அம்பேத்கர். அம்பேத்கருக்கு. பெரியார் ஒரு கடிதம் எழுதுகிறார். நான் அதை தமிழில் வெளிடலாமா என்று. மகிழ்ச்சியாக செய்யுங்கள் என்றார் அம்பேத்கர். உடனடியாக அதை தமிழில் மொழி பெயர்த்து புத்தகமாக வெளியிடுகிறார். இது வரைக்கும் 40 பதிப்புகள் வந்துவிட்டன. அந்த அளவு பரப்பினார்கள். நான் ஏன் நாத்திகனானேன், பகத் சிங் புத்தகம். ஒரு பொதுவுடமைப் போராளி, நாத்திகத் தன்மையின் தேவையைப் பற்றி பேசுகிறார். அது வெளியே போகவேண்டும் என்பது பெரியார் கருத்து. அதை மொழி பெயர்த்தவர் ஜீவானந்தம். அப்போது, குடிஅரசு ஏட்டின் வெளியீட்டாளராக இருந்தவர் பெரியாரின் அண்ணன் ஈ.வெ.கிருஷ்ணசாமி. இதற்காக இரண்டு பேரும் கைது செய்யப்படுகிறார்கள். மொழி பெயர்த்து புத்தகம் போட்டதற்கு. அது ஒன்றும் பொதுவுடமைப் புத்தகம் அல்ல. நாத்திகத்தைப் பற்றிய நூல் தான். ஆனால் எழுதியவர் யார் என்றால் பகத் சிங். அவ்வளவு தான் காரணம். வேறு ஒரு காரணமும் இல்லை. 2009 இறுதி ஈழப் போர் நடந்தபோது, இங்கு ஒரு போராட்டம் நடந்தது கோயமுத்தூரில். இராணுவ வாகன வண்டிகள் இராணுவ தளவாடங்களுடன் போனபோது, அதைத் தடுத்து போராட்டம் நடத்தினார்கள். காவல்துறை போராட்ட இடத்தைச் சுற்றி வளைத்துக் கொள்கிறார்கள், எல்லோரின் பெயரையும் கேட்கிறார்கள். ஒருவர் பிரபாகரன் என்கிறார். ஏறு வண்டியில் என்கிறது காவல்துறை. குழந்தைக்கு பால் வாங்க வந்தேன் என்கிறார். அதெல்லாம் கிடையாது, பெயர் பிரபாகரன் என்பதால் அவரை வண்டியில் ஏற்றிக் கொண்டு போகிறார்கள். அதைப் போல, பகத் சிங் என்று இருக்கிறது. அதற்கு வழக்கு போட்டார்கள். அதில் பெரியார், மன்னிப்பு எழுதித் தரச் சொல்லுகிறார். இது தவறென்று உங்களுக்குப் பட்டால் நான் வருந்துகிறேன், என்று எழுதிக் கொடுத்து விட்டு வாருங்கள் என்று அறிக்கை விடுகிறார். அவர்கள் மன்னிப்பு எழுதிக் கொடுத்ததற்கு, நான் காரணமே தவிர அவர்களல்ல. அதற்கு நானே முழு ஜவாப்தாரி ஆவேன். ஏனென்றால் அரசின் பார்வை நம் பக்கம் திரும்பி விட்டது என்று நான் சொன்னேன், என்று அவர் எழுதுகிறார். இந்தக் கருத்து வேறுபாடுகள் வளர்ந்து வந்து 1936இல் அவர்களெல்லாம் வெளியேறுகிறார்கள். அதற்கு பிறகு காங்கிரசில் இணைந்து விடுகிறார்கள். ஒரே ஒரு மாநாடு சமதர்ம கட்சி என்கிற பெயரில் நடத்தினார்கள். கட்சியின் மாநாட்டின் தீர்மானமே, எஸ்.ஏ.டாங்கே அறிவுரை சொன்னதின்படி நாம் காங்கிரசின் உறுப்பினராகி விடுவோம் என்ற ஒரே தீர்மானம்தான் அதோடு போய் விட்டது அந்த கட்சி. ஆனாலும், இப்படிப்பட்ட நெருடல்கள் பெரியாருக்கும், சமதர்ம கட்சியினருக்கும் இருந்தது தான் அந்த சிக்கல். போனவுடனே பெரியார் மேல் இருந்த கோபத்தில் ஜீவா இராமாயணப் பிரச்சாரம் செய்கிறார்; கம்பராமாயணத்தை பற்றியெல்லாம் பேச ஆரம்பித்து விடுகிறார், ஜீவானந்தம். பெரியாரோடு இருந்தவரை கம்பராமாயணத்தை எதிர்த்துப் பேசி வந்தவர் அவர். விலகிப் போனவுடன், அப்படிப்பட்ட நெருடல்கள் வருகின்றன. அது முடிந்த பிறகு, பெரியாரின் நிலை என்னவாக இருந்தது என்பதை மட்டும்தான் சொல்கிறேன். அதுவரைக்கும் கம்யூனிஸ்டாக இருந்தவர், கம்யூனிசம் பேசியவர், அதற்கப்புறம் பெரியார் மாறிவிட்டாரா? இது மட்டும் தான் நாம் பார்க்க வேண்டியது என்று நான் கருதுகிறேன்.

1972இல் உறையூரில் ஒரு கூட்டம் நடக்கிறது. அந்த கூட்டத்திற்கு தலைப்பே கம்யூனிசம் தான். கம்யூனிசம் என்கிற தலைப்பில் பெரியார் உரையாற்றியிருக்கிறார். அதில் அவர் சொன்னதை மட்டும் - மற்றபடி நிறைய செய்திகள் இருந்தாலும், உங்களிடம் படித்து விடவேண்டும் என்று நினைக்கிறேன். 09.01.1972 பெரியார் மறைவதற்கு முந்தைய ஆண்டில். 1972இல் பேசிய பேச்சு. நாட்டு மக்களெல்லாம் ஒரு

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பல்லடத்தில் மணியம்மையார் பிறந்த நாள் கருத்தரங்கம்




திருப்பூர் மாவட்டம்,பல்லடம் ஒன்றிய திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் அன்னை மணியம்மையார் 102ஆவது பிறந்தநாள் விழா மற்றும் மகளிர் தின கருத்தரங்கம் 28.03.2021 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி யளவில் துவங்கி பல்லடம், இலட்சுமி மில்ஸ் முகில்நிலா அரங்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு தமிழ்நாடு மாணவர் கழகம் தேன்மொழி தலைமை வகித்தார். பல்லடம் சுபா வரவேற்புரை நிகழ்த்தினார். தோழர்கள் மதிவதனி, யாழினி, யாழிசை, தமிழினி ஆகியோர் பகுத்தறிவுப் பாடல்களைப் பாடினார்கள். தொடர்ந்து, ‘பெண் ஏன் அடிமையானாள் நூல் திறனாய்வு’ - பிரசாந்த், ‘திராவிட ஆட்சியில் தமிழகப் பெண்களின் முன்னேற்றம்’ - விஷ்ணு, ‘பெண்களும் மத மூட நம்பிக்கைகளும்’ - சந்தோஷ் ஆகிய தலைப் புகளில் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் கருத்துரையாற்றினர்.

மகளிர் தினத்தையொட்டி தமிழ்நாடு மாணவர் கழகம் கனல்மதி கவிதை வாசித்தார். அடுத்ததாக ‘நவீன காலத்துப் பெண்களும் பெரியாரியமும்’ என்ற தலைப்பில் இரண்யா கருத்துரையாற்றினார்.

இந்நிகழ்வின் சிறப்புரையாக ‘பெண்ணுரிமையை நிலைநாட்டும் சுயமரியாதைத் திருமணம்’ என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசினார்.

அதைத் தொடர்ந்து நிகழ்வில் கழகத் தலைவர் முன்னிலையில் திருப்பூர் மங்கலம் பகுதி சந்தோஷ் தன்னை தமிழ்நாடு மாணவர் கழகத்தில் இணைத்து கொண்டார்.

பல்லடம் அமைப்பாளர் சண்முகம், ‘புரட்சிப் பெரியார் முழக்க’ ஏட்டிற்கு சந்தா வழங்கினார். பல்லடம் அமைப்பாளர்கள் கோவிந்தராஜ், செம்பரிதி, பழனிச்சாமி, மருதாசலம் ஆகியோர் நிகழ்ச்சியை ஒருக்கிணைத்தனர்.

இடம் மற்றும் உணவு கொடுத்த திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தோழர்கள் மணிகண்டன், பிரகாஷ் நிகழ்வில் கலந்து கொண்டனர். குழந்தைகளுக்கும், கருத்துரையாற்றிய தோழர்களுக்கும் கழகத் தலைவர் புத்தகங்களை நினைவுப் பரிசாக வழங்கினார்.

நிகழ்வில் திருப்பூர் மாவட்ட தலைவர் முகில் இராசு, மாஸ்கோ நகர் கோமதி, சரசு, மகாலட்சுமி, மாணவர் கழகத் தோழர்கள் பவானி, கார்த்திகா, முத்தமிழ், ஈழமாறன் மற்றும் பொள்ளாச்சி மாவட்ட செயலர் வெள்ளியங்கிரி, சபரிகிரி, கோவை மாநகர செயலாளர் நிர்மல், பெரியார் பிஞ்சுகள் தமிழினியன், முகில், பிரகலாதன், பரிதி நிலவன், எழிலரசன், செங்கதிர் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியாக பல்லடம் பொன்மணி நன்றியுரை கூறினார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049
newsdvk@gmail.com

(முதல் பக்கத் தொடர்ச்சி)

குடும்பம் போல எல்லா மக்களும் பாடுபடவேண்டும். வருகிற லாபம் விளை பொருள் முதலியவற்றை எல்லோருக்கும் பகிர்ந்தளிப்பது. இது தான், குடும்பத்தில் செய்வதை போல, இது தான் பொதுவுடைமையாகும் என்று சொல்லிவிட்டு, “கோடீஸ்வரனுக்கு எப்படி தனது ஒரு கோடி ரூபாயைக் காப்பது என்கிற கவலை, அத்தோடு நின்றுவிடுவது இல்லை. தனக்கு ஒரு கோடி தானே உள்ளது, அடுத்தவனுக்கு இரண்டு கோடி ரூபாய் இருக்கிறதே என்று நினைக்கிறான்” என்றெல்லாம் சொல்லிவிட்டு, கடைசியாக அவர் சொல்கிறார். “மனக் கவலை குறைகளையெல்லாம், பொதுவுடைமை ஒன்றினால் தான் நிவர்த்தி செய்ய முடியும். பொதுவுடைமை என்று கூறுவதன் அடிப்படைத் தத்துவமே, மனிதன் கவலையற்ற வாழ்வு வாழ வேண்டு மென்பதுதான். சொந்த உடைமை என்பது கவலை நிறைந்த வாழ்வாகும். மனிதன் என்னவென்று நினைத்துக் கொள்கிறான்”.

பெரியார் சொல்கிறார்: “மோட்சம் முக்தி என்ற வார்த்தைக்கு என்ன பொருள் என்று தெரியுமா?” என்று கேட்டுவிட்டு சொல்கிறார். “துக்கம் நாசம், சுக பிராப்தி. துக்கம் அழிந்துவிட வேண்டும், சுகமாக இருக்க வேண்டும் என்பது தான், மோட்சம் முக்தி என்பதற்கான பொருள். உங்களுக்கு பொதுவுடைமை வந்தால் இவைத் தேவைப்படாது. ஏனென்றால், உங்களுக்கு துக்க நாசம் ஏற்பட்டுவிடும், சுக பிராப்தி ஏற்பட்டு விடும். எனவே உங்களுக்கு மோட்சம் நரகம் கூட தேவை இருக்காது. அந்த சிந்தனைகூட வராத நிலை வந்துவிடும். தயவு செய்து பொதுவுடைமைக்கு வாருங்கள். துக்க நிவர்த்திக்கும் குறைபாடுகள் ஒழிப்பிற்கும் பரிகாரம், பொதுவுடைமை தான் ஆகும். நம் நாட்டிலும் கம்யூனிஸ்ட்காரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தம் வயிற்றுப் பிழைப்பிற்கு மட்டும் பொதுவுடைமையை சாதனமாக பயன்படுத்திக் கொள்கிறார்கள்” என்று தொடர்ந்து பேசுகிறார். கம்யூனிஸ்ட்கள் மீது பெரியாருக்கு கோபம் இருந்தது. ஆனால் கம்யூனிசம் மீது எப்போதும் கோபம் இருந்தது இல்லை என்பதற்காக இதைச் சொல்லுகிறேன்.

(தொடரும்)

# ஃபாரூக் நினைவு நாளில் மத அடிப்படைவாத எதிர்ப்பு கருத்தரங்கம்




இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட கழகத் தோழர் ஃபாரூக் நான்காம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, கடந்த 21.03.2021 அன்று மாலை 5 மணியளவில் கோவை அண்ணாமலை அரங்கத்தில் நடைபெற்றது. நிகழ்விற்கு கோவை மாநகர தலைவர் நேருதாஸ் தலைமை வகித்தார். ஜின்னா வரவேற்புரையாற்றினார். நிகழ்விற்கு, ஜெயந்த், நிர்மல்குமார், வெங்கட், மாதவன், கிருஷ்ணன், சென்னை அய்யப்பன், மணிவண்ணன், அஸ்ரஃப் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இசைமதி, மக்கள் நலத்திற்கு மதமா? மதத்தின் நலத்திற்கு மக்களா’ என்ற பாரதிதாசன் பாடலைப் பாடினார். தொடர்ந்து, Ex Muslims of British council மரியம் நாமாசே, இலண்டன் பாசில் ஆகியோர் காணொளி மூலம் உரை நிகழ்த்தினர். கல்லூரி பேராசிரியர் அருள் அமலன்(இமுகூ), புரட்சிகர இளைஞர் முண்ணனி மாவட்ட செயலாளர் மலரவன், கேரளா முன்னாள் முஸ்லிம்கள் அமைப்பைச் சேர்ந்த லியாகத் அலி, பீர்முகமது (இமுகூ), ஐதராபாத் முன்னாள் முஸ்லிம்கள் ஹீனா காணொளி மூலமும், மக்கள் சிவில் உரிமைக் கழக தேசிய செயலாளர் பாலமுருகன், கேரளா சுயசிந்தனையாளர் அமைப்பைச் சார்ந்த முகமது கான் காணொளி மூலமும், தமிழ்நாடு திராவிடர் கழகம் காசு நாகராசு, Britain council of Ex Muslims ஜிம்மி பங்காஷ், Srilanka Council of Ex Muslims ரிஷ்வின் ஆகியோர் காணொளி மூலமும் உரையாற்றினர். சகபாஸ் (இமுகூ) நிகழ்வில் பங்கேற்று உரையாற்றினார். அடுத்ததாக ஃபாரூக் ஆவணப் படத்தை ரசிதா ஃபாரூக் வெளியிட்டார்.

நிகழ்வில், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்க பொறுப்பாளரும் எழுத்தாளருமான அ.கரீம் எழுதிய “அகல்வாவுக்கு ஒரு ரொட்டி” என்ற நூலை பாமரன் வெளியிட கழகத் தலைவர் கொளத்தூர் மணி பெற்றுக் கொண்டார். இந்த நூலின் முதல் கதை கழகத் தோழர் ஃபாரூக்கை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளது.

இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி நினைவேந்தல் உரையாற்றினார். நிகழ்வை, திராவிடர் விடுதலைக் கழகம், Essence club of Kerala, இந்தியா முற்போக்காளர் கூட்டமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது.

## ‘சீமானின் சிந்தனை முத்துக்கள்’

- *தமிழ்நாட்டின் பெயரை மாற்றினால் இந்தியாவுக்கே ‘தமிழ்நாடு’ பெயரை வச்சிடுவேன்.* **– சீமான்**

*வைக்கிறதுதான் வைக்கிறீங்க... ‘ஆசியா’வுக்கே வச்சிடுங்கண்ணே.*

- *நான் பதவிக்கு வந்த உடனேயே வேலை வாய்ப்பு; வருமானம் இரண்டையும் உங்களுக்கு தந்துடுவேன். ‘மிக்சி’, கிரைண்டர் எல்லாம் நீங்க தான் வாங்கிக்கணும்.* **– சீமான்**

*விடுங்கண்ணே; அதை நாங்க பாத்துக்கிறோம். ஆனால் வேலையையும் வருமானத்தையும் எங்கே வாங்கப் போறீங்கன்னு, யாரிடமும் சொல்லிடாதீங்க; இரகசியமா வச்சிக்குங்க; திராவிடக் கட்சி திருடிக்கும்!*

- *கல்வியில்தென் கொரியா தான் முதலிடத்தில் இருக்குது.* **– சீமான்**

*முதல் இடம் ‘பின்லாந்து’ நாடு என்று சொன்னாங்களே! சரி; சரி அண்ணன் தென் கொரியா நாட்டையே ‘பின்லாந்தா’ மாற்றியிருப்பாரு போல!*

- *நான் அதிகாரத்துக்கு வந்தா பள்ளிக் கல்வித் தரத்தை உலகக் கல்வி தரத்துக்கு உயர்த்திடுவேன்.* **– சீமான்**

*இது தப்புண்ணே.... உலகக் கல்வித்தரத்தை நம்ம கல்வித்தரத்துக்கு மாற்றுவது தானே தமிழனுக்கு பெருமை! அவ்வையாரும் வள்ளுவரும் ‘ஆக்ஸ்போர்டு’ போய் படிச்சாங்களா? நீங்களே இப்படி செய்யலாமா?*

- *நான் சட்டசபையிலே உட்கார்ந்த உடனே கச்சத் தீவு, நம்ம கைக்கு வந்துடும்.* **– சீமான்**

*கையோடு கையா, அந்த ஈழத்தையும் அப்படியே எடுத்துக்கிட்டா ஒரு ‘வேலை’ முடிஞ்சிடும்ல!*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 01st April 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN